بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ

# ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத் தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் 04/07/2025 அன்று U.K - இஸ்லாமாபாதிலுள்ள முபாரக் பள்ளிவாசலில் ஆற்றிய ஜுமுஆ பேருரையின் சுருக்கம்

## மக்கா வெற்றி தொடர்பாக ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் வாழ்க்கை வரலாற்றிலிருந்து ஈமானுக்கு வலுவூட்டக்கூடிய குறிப்புகள்

أَشْهَدُ أَنْ لَّا إِلٰهَ إِلَّا اللّٰهُ وَحْدَهٗ لَا شَرِيْكَ لَهٗ وَأَشْهَدُ أَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ۔ أَمَّا بَعْدُ فَأَعُوْذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ۔

بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ ﴿۱﴾ اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعٰلَمِيْنَ ﴿۲﴾ اَلرَّحْمٰنِ الرَّحِيْمِ ﴿۳﴾ مٰلِكِ يَوْمِ الدِّيْنِ ﴿۴﴾

إِيَّاكَ نَعْبُدُ وَإِيَّاكَ نَسْتَعِيْنُ ﴿۵﴾ اِهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيْمَ ﴿۶﴾ صِرَاطَ الَّذِيْنَ أَنْعَمْتَ عَلَيْهِمْ ۙ غَيْرِ الْمَغْضُوْبِ عَلَيْهِمْ وَلَا الضَّآلِّيْنَ ﴿۷﴾

மக்கா வெற்றியின் போது மக்காவிற்குள் நுழைந்த சூழ்நிலை முந்தைய குத்பாவில் குறிப்பிடப்பட்டிருந்தது. அதன் கூடுதல் விவரங்கள் பின்வருமாறு: அபூ சுஃப்யான் அல்லாஹ்வின் படைகளைக் பார்த்ததன் பிறகு திரும்பியதாக இப்னு இஸ்ஹாக் எழுதியுள்ளார். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தமது பச்சை நிற உடையணிந்த படைகளுடன் வந்தார்கள். ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களுக்கும், ஹஸ்ரத் ஹுஸைர் (ரலி) அவர்களுக்கும் இடையில் தமது ஒட்டகமான கஸ்வாவில் இருந்ததாக இப்னு சாஃத் எழுதியுள்ளார்கள்.

அந்த நேரத்தில் மாநபி (ஸல்) அவர்கள் சூரா ஃபத்ஹை ஓதிக் கொண்டிருந்தார்கள். அன்னார் (ஸல்) அவர்கள் மக்காவில் நுழைந்தபோது, பொதுமக்கள் அன்னாரைப் பார்க்க வந்தனர். அன்னார் (ஸல்) தம் பணிவு காரணமாக, அன்னாரது தலை அவர்களது ஒட்டகத்தின் சேணத்தைத் தொட்டது. அன்னார் (ஸல்) ஒரு கருப்பு தலைப்பாகை அணிந்திருந்தார்கள். மேலும் கொடி கருப்பு நிறத்தில் இருந்தது. அப்போது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் பின்வருமாறு கூறினார்கள்:

اَللّٰهُمَّ إِنَّ الْعَيْشَ عَيْشُ الْآخِرَةْ அல்லாஹ்வே, நிச்சயமாக, உண்மையான வாழ்க்கை மறுமையின் வாழ்க்கை ஆகும். நீதி மற்றும் நியாயத்தின் மற்றொரு அம்சம் என்னவென்றால், அவர்கள் தமது விடுவிக்கப்பட்ட அடிமை ஹஸ்ரத் ஸைத் பின் ஹாரிஸா (ரலி) அவர்களின் மகன் ஒஸாமா (ரலி) அவர்களைத் தமக்குப் பின்னால் சவாரியில் அமர்த்தி இருந்தார்கள். பெருமானார் (ஸல்) அவர்கள் ரமலான் 20 ஆம் தேதி சூரியன் சிறிது உதயமானபோது மக்காவில் நுழைந்தார்கள்.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்: சிறப்பான அடியார்களுக்கு வழங்கப்பட்ட இந்த உயர்வு பணிவின் நிறத்தில் உள்ளது. ஷைத்தானின் உயர்வு ஆணவத்துடன் கலந்திருந்தது. பாருங்கள்! நமது தூய நபி (ஸல்) அவர்கள் மக்காவை வென்றபோது, அவர்கள் அதே மக்காவில் எல்லா வகையிலும் எதிர்க்கப்பட்டு காயமடைந்தபோது, மேலும் கஷ்டங்கள் மற்றும் சிரமங்கள் நிறைந்த அந்த நாட்களில் அவர்கள் தம் தலையைக் குனிந்து வணங்கியது போலவே சிரம் பணிந்தார்கள். தாம் அங்கிருந்து வெளியேறிய நிலையையும், தாம் இப்போது வந்த நிலையையும் அன்னார் (ஸல்) பார்த்தபோது, அன்னாரது உள்ளம் இறைவனுக்கு முன் நன்றியால் நிறைந்தது. அன்னார் (ஸல்) இறைவனுக்கு முன்பாக ஸஜ்தா செய்தார்கள்.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்: அன்னார் (ஸல்) மக்காவிற்குள் நுழைந்தபோது, மக்கள் தாங்கள் எங்கே தங்குவீர்கள் என்று கேட்டார்கள். அதற்கு அன்னார் (ஸல்) அவர்கள், "அகீல் எங்களுக்கு ஏதாவது வீடு விட்டுச் சென்றாரா?" என்று கேட்டார்கள். அதாவது, என் உறவினர்கள் எனது சொத்துக்கள் அனைத்தையும் விற்றுவிட்டார்கள். பின்னர் அன்னார் (ஸல்), "நாங்கள் கைஃப் பனீ கினானாவில் தங்குவோம்" என்றார்கள். இது ஒரு மைதானம் ஆகும். குறைஷிகளும் பனி கினானாக்களும் சேர்ந்து, பனூ ஹாஷிம் மற்றும் பனூ அப்துல் முத்தலிபும் ஹஸ்ரத் முஹம்மத் (ஸல்) அவர்களைப் பிடித்து எங்களிடம் ஒப்படைக்காத வரை, அவர்களின் கூட்டத்தை விட்டு வெளியேறாத வரை, நாங்கள் அவர்களுடன் திருமண உறவு வைத்துக் கொள்ளவோ அல்லது அவர்களுடன் கொடுக்கல் வாங்கல் செய்யவோ மாட்டோம் என்று சத்தியம் செய்தனர்.

மாநபி (ஸல்) அவர்கள் நாளின் ஒரு பகுதி தமது கூடாரத்தில் தங்கினார்கள். பின்னர் அவர்கள் தமது ஒட்டகமான கஸ்வாவை வரவழைத்து, ஆயுதம் ஏந்தி, கவசம் அணிந்து, ஒட்டகத்தின் மீது ஏறினார்கள். ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் இருந்தார்கள். அன்னார் (ஸல்) அவர்களுடன் பேசிக் கொண்டிருந்தார்கள்.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மக்காவிற்குள் நுழைந்தபோது, காபாவைச் சுற்றி 360 சிலைகள் இருந்தன. ஹுபல் அவைகளில் மிகப்பெரிய சிலை ஆகும். பெருமானார் (ஸல்) அவர்களின் கையில் ஒரு வில் இருந்தது. அன்னார் (ஸல்) அவர்கள் ஒவ்வொரு சிலையையும் கடந்து செல்லும் போதெல்லாம், சிலையின் கண்ணில் தமது வில்லால் அடித்து, جَآءَ الْحَقُّ وَزَهَقَ الْبَاطِلُ ۭ اِنَّ الْبَاطِلَ كَانَ زَهُوْقًا அதாவது, "உண்மை

வந்துவிட்டது, பொய் ஓடிவிட்டது, பொய் ஓடிவிடக் கூடிய ஒன்றேயாகும்" என்று கூறுவார்கள்.

அன்னார் (ஸல்) அவர்கள் கஅபாவை அடைந்து அதைப் பார்த்தார்கள். பின்னர் அன்னார் (ஸல்) அவர்கள் தமது குதிரையில் முன்னோக்கிச் சென்று தமது கைத்தடியால் ஹஜரே அஸ்வதைத் தொட்டு, "அல்லாஹு அக்பர்" என்று கூறினார்கள். முஸ்லிம்களும் "நாராயே தக்பீர்" முழக்கமிட்டனர். மக்காவின் நான்கு புறமும் "தக்பீர்களின் ஓசையால்" எதிரொலிக்க ஆரம்பித்தன. பெருமானார் (ஸல்) அவர்கள் சஹாபிகளைத் தடுத்தார்கள். காஃபிர்கள் மலைகளிலிருந்து இந்தக் காட்சியைப் பார்த்துக் கொண்டிருந்தனர். அன்னார் (ஸல்) அவர்கள் காபாவை வலம் வந்தார்கள். அப்போது ஹஸ்ரத் முஹம்மது பின் மஸ்லமா (ரலி) ஒட்டகத்தின் கடிவாளத்தைப் பிடித்திருந்தார்கள். அன்னார் (ஸல்) தமது குதிரையிலிருந்து இறங்கினார்கள்.

மாநபி (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் உமர் பின் கத்தாப் (ரலி) அவர்களை கஅபாவிற்குச் சென்று அதில் உள்ள ஒவ்வொரு உருவத்தையும் அழிக்கும்படி கட்டளையிட்டதாக ஒரு அறிவிப்பும் உள்ளது. கஅபாவிலிருந்து ஒவ்வொரு உருவமும் அழிக்கப்படும் வரை அன்னார் (ஸல்) அதில் நுழையவில்லை. அன்னார் (ஸல்) அவர்கள் மகாமே இப்ராஹீமுக்கு வந்து இரண்டு ரக்அத்கள் தொழுதார்கள். பின்னர் அன்னார் ஸம்ஸமுக்கு அருகில் சென்றார்கள். ஹஸ்ரத் அப்பாஸ் பின் அப்தில் முத்தலிப் அல்லது ஹஸ்ரத் அபூ சுஃப்யான் பின் ஹாரிஸ் பின் அப்தில் முத்தலிப் அன்னாருக்காக ஒரு குவளை கொண்டு வந்தார்கள். அந்தத் தண்ணீரைக் குடித்ததன் பிறகு உளூ செய்தார்கள். சஹாபிகள் விரைவாக அன்னாரது உளூ செய்த தண்ணீரைத் தங்கள் உள்ளங்கைகளில் எடுக்கத் தொடங்கினர். சஹாபிகள் அந்தத் தண்ணீரைத் தங்கள் முகத்தில் தடவிக் கொண்டிருந்தனர். இந்தக் காட்சியைப் பார்த்துக் கொண்டிருந்த காஃபிர்கள் ஆச்சரியப்பட்டு, "இவ்வளவு பெரிய அரசரைப் பற்றி நாங்கள் கேள்விப்பட்டதுமில்லை, அவரைப் பார்த்ததுமில்லை" என்று கூறினார்கள்.

ஹுபல் சிலை இடிக்கப்பட்டபோது, ஹஸ்ரத் ஜுபைர் பின் அவ்வாம் (ரலி) அவர்கள் அபூ சுஃப்யானிடம், "ஹுபல் இடிக்கப்பட்டு விட்டது. உஹுத் நாளில் ஹுபல் என்ற பெயரைப் பயன்படுத்தி நீங்கள் பெரும் ஆணவம் கொண்டிருந்தீர்கள்" என்று கூறினார்கள். அதற்கு அபூ சுஃப்யான், இப்னு அவ்வாமே!" இப்போது இந்த விஷயங்களை விட்டுவிடுங்கள், ஏனென்றால் முஹம்மது (ஸல்) அவர்களின் அல்லாஹ்வைத் தவிர வேறு கடவுள் இருந்திருந்தால், இன்று நடந்திருப்பது நடந்திருக்காது என்பதை நான் அறிந்திருக்கிறேன்' என்று கூறினார்.

அதன் பிறகு, மாநபி (ஸல்) அவர்கள் கஅபாவின் ஒரு மூலையில் அமர்ந்தார்கள். மக்கள் அவர்களைச் சுற்றி கூடினர். அந்த நேரத்தில் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் அன்னாருடன் ஒரு வாளைப் பிடித்துக் கொண்டு நின்றார்கள். மாநபி (ஸல்) அவர்கள் உஸ்மான் பின் தல்ஹா (ரலி) அவர்களை அழைத்து, "கஅபாவின் சாவியை என்னிடம் கொண்டு வாருங்கள்" என்று கூறினார்கள். அவர் தம் தாயாரிடம் சென்றார். ஆனால் அவருடைய தாயார் திறவுகோலை அவருக்குக் கொடுக்க மறுத்துவிட்டார்கள். ஹஸ்ரத் உஸ்மான் பின் தல்ஹா (ரலி) அவரிடம், "நீங்கள் எனக்கு சாவியைக் கொடுக்கவில்லை என்றால், இந்த வாள் என் முதுகை பிளந்து விடும்" என்று கூறினார். அப்போது, அவரது தாயார் அவருக்கு சாவியைக் கொடுத்தார்கள். அவர் சாவியுடன் நபி (ஸல்) அவர்களிடம் வந்தார். அன்னார் (ஸல்) அதை அவரிடம் திருப்பிக் கொடுத்தார்கள். அவர் கதவைத் திறந்தார். மாநபி (ஸல்) அவர்கள் உஸாமா பின் ஸைத் (ரலி) மற்றும் பிலால் பின் ரபாஹ் (ரலி) ஆகியோருடன் கஅபாவிற்குள் நுழைந்தார்கள். கஅபாவின் சாவியின் உரிமையாளரான உஸ்மான் பின் தல்ஹாவும் அவர்களுடன் இருந்தார். அன்னார் (ஸல்) கஅபாவின் கதவை மூடினார்கள். நீண்ட நேரம் உள்ளே தங்கி அங்கே இரண்டு ரக்அத் தொழுதார்கள்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊத் (அலை) கூறுகிறார்கள்: இந்த விஷயத்தை மனதின் முன்னிலையில் வைத்துக் கொள்ளுங்கள். கருப்புக் கல் அல்லாஹ்வின் வீட்டில் இருப்பது போல, இதயம் நெஞ்சில் உள்ளது. நம் நெஞ்சில் இருக்கும் மனித இதயத்திற்கு கருப்புக் கல்லின் உதாரணத்தை அன்னார் (அலை) தருகிறார்கள். காஃபிர்கள் அங்கு சிலைகளை வைத்த ஒரு காலம் அல்லாஹ்வின் ஆலயத்திற்கும் வந்தது என்று அன்னார் கூறுகிறார்கள். இந்த நேரம் அல்லாஹ்வின் வீட்டிற்கு வந்திருக்க வாய்ப்பில்லை. ஆனால் இல்லை, அல்லாஹ் அதை ஒரு உதாரணமாக ஆக்கினான். மனித இதயமும் கருப்புக் கல்லைப் போன்றது. அவன் நெஞ்சம் அல்லாஹ்வின் வீட்டிற்கு ஒத்திருக்கிறது. அல்லாஹ்வைத் தவிர வேறு எண்ணங்கள இந்த காபாவில் வைக்கப்பட்டுள்ள சிலைகள் ஆகும். அதாவது, அல்லாஹ்வைத் தவிர வேறு எந்த எண்ணங்கள் இதயத்திற்கு வந்தாலும், அவை அனைத்தும் சிலைகள் ஆகும். நமது மாநபி (ஸல்) அவர்கள் பத்தாயிரம் தூய மனிதர்கள் கொண்ட ஜமாஅத்துடன் மக்காவில் சென்றபோது, மக்கா வெற்றி கொள்ளப்பட்டபோது, அங்குள்ள சிலைகள் அழிக்கப்பட்டன. இந்தப் பத்தாயிரம் தோழர்கள் ஆரம்பகால புத்தகங்களில் மலக்குகள் என்று விவரிக்கப்படுகிறார்கள். உண்மையில் அவர்களின் கண்ணியம் மலக்குகள் போன்றது. மலக்குகளின் கண்ணியம்,

يَفْعَلُوْنَ مَا يُؤْمَرُوْنَ அதாவது, அவர்கள் சொல்வதைச் செய்வதுதான். மனித இனத்திற்கும் ஒரு வகையில் மலக்குகள் அந்தஸ்து உண்டு.

மக்கா வெற்றியின் போது அன்னார் (ஸல்) கூறினார்கள்: குறைஷியர்களே! நான் உங்களுக்கு என்ன செய்ய வேண்டும் என்று நீங்கள் நினைக்கிறீர்கள்? குறைஷியர்கள், நீங்கள் என்ன செய்வீர்களோ அது சிறப்பானது ஆகும் என்று சொன்னார்கள். நீங்கள் கண்ணியமான சகோதரர் மற்றும் கண்ணியமான சகோதரரின் மகன் ஆவீர்கள் என்றனர். அன்னார் (ஸல்) கூறினார்கள்: "சரி, போங்கள், நீங்கள் அனைவரும் சுதந்திரமானவர்கள்." பொது மன்னிப்பு அறிவிப்பைக் கேட்ட மக்கள், அப்போதுதான் தங்கள் கல்லறைகளிலிருந்து வெளியே வந்தது போல இஸ்லாத்தில் நுழைய ஆரம்பித்தனர்.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) கூறுகிறார்கள்: அனைத்து காஃபிர்களும் கைது செய்யப்பட்டு அன்னார் (ஸல்) முன் நிறுத்தப்பட்டனர். காஃபிர்களே தங்களை கடுமையான குற்றங்களுக்காகக் கொல்லப்பட வேண்டியவர்கள் என்றும், அவர்கள் தங்களை அன்னாரது கருணைக்கு ஒப்படைத்தவர்கள் என்றும் ஒப்புக்கொண்டனர். எனவே அன்னார் (ஸல்) அவர்கள் அனைவரையும் மன்னித்தார்கள். ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) கூறுகிறார்கள்:

அவர்கள் தண்டிக்கப்பட்டிருந்தால், அது முற்றிலும் நியாயமானதாகவும் நீதியாகவும் இருந்திருக்கும். ஆனால் அந்த நேரத்தில் அன்னார் (ஸல்) தம்முடைய மன்னிப்பு மற்றும் தாராள மனப்பான்மைக்கு ஒரு உதாரணத்தைக் காட்டினார்கள். மற்ற அற்புதங்களைத் தவிர, சஹாபிகளை பாதித்த விஷயங்கள் இவைதான். அதனால்தான் அன்னார் முஹம்மது {(ஸல்)} என்ற பெயரால் அறியப்பட்டார்கள். அவர்கள் மீது அமைதியும் அருள்களும் உண்டாகட்டும். பூமியிலும், அதேபோல் வானத்திலும் அன்னார் புகழப்பட்டார்கள். வானத்திலும் அன்னார் முஹம்மது {(ஸல்)} ஆவார்கள்.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகிறார்கள்: ஒரு நபர் தனக்குள் இந்த வகையான ஒழுக்க குணத்தை வளர்த்துக் கொள்ளாவிட்டால், எந்தப் பயனும் இல்லை. ஒரு நபர், தூய நபி (ஸல்) அவர்களின் ஒழுக்கங்களையும் நடத்தையையும் ஏற்றுக்கொண்டு, அதைத் தனது வழிகாட்டியாக மாற்றாவிட்டால், அல்லாஹ்வின் அன்பைத் தனக்குள் முழுமையாக வளர்த்துக் கொள்ள முடியாது.

اَللّٰهُمَّ صَلِّ عَلٰى مُحَمَّدٍ وَعَلٰى آلِ مُحَمَّدٍ

மீதமுள்ள விஷயங்களை நான் பின்னர் கூறுவேன்.

*இறுதியாக, ஹுஸூர் அன்வர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் மௌலோத் அஹ்மத் சாஹிபின் மனைவி சையதா லுப்னா அஹ்மத் சாஹிபா அவர்களுடைய நற்குறிப்பை எடுத்துக் கூறினார்கள்.*

**அவர்கள் சமீபத்தில் 71 வயதில் காலமானார்கள். இன்னா லில்லாஹி வ இன்னா இலைஹி ராஜிஊன். சாஹிப்சாதா அமத்துல் ஹக்கீம் பேகம் சாஹிபா மற்றும் சையத் தாவூத் முசஃப்பர் ஷா சாஹிப் ஆகியோரின் மகனான சையத் மௌலோத் அஹ்மத் சாஹிபை மணந்தார்கள். அவர்களின் திருமணத்தை ஹஸ்ரத் மூன்றாவது கலீபத்துல் மஸீஹ் (ரஹி) நடத்தினார்கள். மேலும் அறிவுரை வழங்கினார்கள்.**

**திருமண உறவுகள் ஒரு மரத்தின் ஒட்டு போன்றது என்றும், அதை ஆரம்பத்தில் மிகவும் கவனமாகப் பராமரிக்க வேண்டும் என்றும் அவர்கள் கூறினார்கள். திருக்குர்ஆனின் வழிகாட்டுதலின்படி, இந்த ஒட்டு உண்மையின் மூலம் நூல்களால் பிணைக்கப்பட வேண்டும். அப்போதுதான் அது பாதுகாக்கப்படுகிறது. மேலும் அதன் பொறுப்பு கணவன் மற்றும் மனைவி மீது மட்டுமல்ல, அவர்களின் குடும்பங்கள், அவர்களின் சூழல் மற்றும் அவர்களின் நண்பர்கள் மீதும் கூட விழுகிறது. ஏனெனில் பல தீமைகள் விரோதத்தின் விளைவாகவோ அல்லது வதந்திகளின் விளைவாகவோ அல்லது பொறுமையின்மையின் விளைவாகவோ அல்லது கோபத்தின் விளைவாகவோ எழுகின்றன. அவற்றைத் தடுக்க, உண்மையைப் பேசுவது மிகவும் வலுவான பாலமாக அமைகிறது.**

*ஹுஸூர் அன்வர் (அய்யதஹுல்லாஹ்...) கூறினார்கள்:* **"மதிப்பிற்குரிய லுப்னா சாஹிபா ஹஸ்ரத் மூன்றாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரஹி) அவர்களின் இந்த வார்த்தைகளை நிறைவேற்ற முயன்றார் என்று, ஒரு உறவும் இருந்ததால், என்னால் கூற முடியும்.** *ஹுஸூர் அன்வர் (அய்யதஹுல்லாஹ்...) கூறினார்கள்:* **"அவர் என் மனைவியின் மைத்துனியும் கூட ஆவார்கள்.**

*அதேபோல், ஹுஸூர் அன்வர் (அய்யதஹுல்லாஹ்...) ஜெர்மனியைச் சேர்ந்த முஹம்மது ஷாஃபி ஜுபைர் சாஹிபின் மனைவியான மரியாதைக்குரிய நஸ்முன் பீபீ ஜுபைர் சாஹிபாவின் நற்குறிப்பை கூறி ஜனாஸா காயிப் தொழுகை நடத்தப்படும் என்றும், மேலும் அவர்கள் இருவரின் மன்னிப்பு மற்றும் பதவி உயர்வுக்காகவும் துஆ செய்தார்கள்.*

اَلْحَمْدُ لِلّٰهِ ! اَلْحَمْدُ لِلّٰهِ نَحْمَدُهٗ وَنَسْتَعِيْنُهٗ وَنَسْتَغْفِرُهٗ وَنُؤْمِنُ بِهٖ وَنَتَوَكَّلُ عَلَيْهِ وَنَعُوْذُ بِاللّٰهِ مِنْ شُرُوْرِ اَنْفُسِنَا وَمِنْ سَيِّئَاتِ اَعْمَالِنَا

مَنْ يَّهْدِهِ اللّٰهُ فَلَا مُضِلَّ لَهٗ وَمَنْ يُّضْلِلْهُ فَلَا هَادِيَ لَهٗ وَنَشْهَدُ اَنْ لَّآ اِلٰهَ اِلَّا اللّٰهُ وَنَشْهَدُ اَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ، عِبَادَ اللّٰهِ رَحِمَكُمُ

اللّٰهُ اِنَّ اللّٰهَ يَاْمُرُ بِالْعَدْلِ وَالْاِحْسَانِ وَاِيْتَآءِ ذِي الْقُرْبٰى وَيَنْهٰى عَنِ الْفَحْشَآءِ وَالْمُنْكَرِ وَالْبَغْيِ يَعِظُكُمْ لَعَلَّكُمْ تَذَكَّرُوْنَ اُذْكُرُوا اللّٰهَ

يَذْكُرْكُمْ وَادْعُوْهُ يَسْتَجِبْ لَكُمْ وَلَذِكْرُ اللّٰهِ اَكْبَرُ۔

**(தமிழாக்கம்: மவ்லவி.M. ஷஹாபுத்தீன்)**